## தலைப்பு 05 - அமைச்சரவை அலுவலகம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அமைச்சரவை அலுவலகத்தின்2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று,காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ்,கணக்காய்வு செய்யப்பட்டன.2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2019 யூலை 23 ஆந் திகதியன்று கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர,அமைச்சரவை அலுவலகத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புஎனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கும் இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான நிதிக்கூற்றுக்களை மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து அதனைப் பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டுவதுடன், அதன் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வுகளை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்யவும் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரது பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலைவழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவது என்பனஎனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாகஇருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்கள் அற்றதென வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர்மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிரயாத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைப்புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும்உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் வசதியானவாறும் நியாயமானவாறும் உள்ளடங்கியுள்ளன என்பதும்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டபூர்வத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவை இன்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிலானவற்றுக்கு ஒப்பாக இருப்பதாக அறிவிக்க முடியாமை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தேவை அமைச்சரவை அலுவலகத்திற்குக் கிடையாதாகையால் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், அத்தேவைகளுக்கு அப்பாற்பட்டவாறு நடந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதித் திறைசேரி கணக்கு கூற்றுக்கள் இணைப்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கமையத் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். தவறாக இணைப்பு சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறு நடவாதிருக்க குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (ஆ) | மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-எப் மாதிரிப் படிவத்தின் கீழான நிதிச் செயலாற்றல் கூற்றின் இடதுபக்கத்துக் கோட்டில் 2018 ஆம் ஆண்டினது வரவு, செலவுத் திட்டம் புள்ளி விபரங்களுடன் காட்டப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கமையத் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வரவு, செலவுத்திட்டத் தகவல்கள் தவறாக இணைப்பு சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறு நடவாதிருக்க குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (இ) | மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-2 (iii) மாதிரிப் படிவத்தில் குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கமையத் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். வரவு, செலவுத் திட்டத் தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறு நடவாதிருக்க குறித்த |

உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) சொத்துக்கள், பொறித்தொகுதி, மற்றும் உபகரணம்**

சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களைக் கணக்கிலிடும்போது பின்வரும் குறைபாடுகள் தெரியவந்தன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 மாதிரிப் படிவத்தின் கீழ் நிதிசார்பற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அறிவிக்கப்பட்ட சொத்துக்களின் பொருட்டு அரச கணக்கீட்டுத் திணைக்களத்தால் 2018 டிசம்பர் உள்ளவாறு சொத்து அறிக்கை (Assets Report) வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் நிதிசார்பற்ற சொத்துக்களை அறிவிக்கும் போது 2018 நவெம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3.3, 8.1, 8.2 என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஆரம்ப மீதித் தரவைத் தயாரிக்கும் போது ஏற்பட்ட ஒரு சில சிக்கல்கள் காரணமாக நிலையான சொத்துப் பதிவேட்டிற்கும் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத் தரப்புக்குமிடையே வேறுபாடுகள் ஏற்பட்டன. அதன் காரணமாக, நிதிசார்பற்ற சொத்து அறிக்கை வழங்கப்படவில்லை. இந் நிலைமையச் சீர் செய்வதற்கு அரச கணக்கீட்டுத் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அத் திணைக்களம் 2019.08.31 வரை தவணை கோரியுள்ளது. |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-6 மாதிரிப் படிவத்தில் 2018 சனவரி 01 இல் உள்ளவாறான சொத்தின் மீதியாகிய ரூபா 312,680, ஆண்டின் போது சுவீகரிக்கப்பட்ட ரூபா 4,700,000 மற்றும் கைத்தவிர்ப்பாகிய ரூபா 1,643,385 என்பன 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறாக CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துப் பதிவேட்டிலும் திறைசேரி கணனி | நிதிக்கூற்றுக்களில் நிதிசாரா சொத்துக்களை அறிக்கையிடும் போது, 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3, 8.1, 8.2 என்பவற்றிற் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மோட்டார் சைக்கிள் மீதியும் கைதவிர்ப்புப் பெறுமதியும் அரச கணக்கீட்டுத் திணைக்களத்திடம் வினவப்பட்டு துரிதமாக சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மோட்டார் வாகனப் பெறுமதி ஆகிய ரூபா |

| | | |
|---|---|---|
| அச்சுப்பிரதிகள் பேரேட்டு மீதிகளிலும் அறிவிக்கப்படவில்லை. | | 4,700,000 சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் 2019 சனவரியில் உள்ளடக்கப்படும். |

**(ஆ) முற்பணக் கணக்கு மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கில் மீளாய்வாண்டின் போது காசாகச் செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 2,972,949 மற்றும் குறுக்குக் குறிப்பின் மூலம் செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 1,002,938 என்பனவாகும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-5 மாதிரிப் படிவத்தின் மூலம் முற்பணக் கணக்கிற்குரிய தகவல்களை அறிக்கையிடும் போது ஆண்டின் போது காசாக செலவு வைக்கப்பட்டவை மற்றும் குறுக்குக் குறிப்பின் மூலம் செலவு வைக்கப்பட்டவை என்பன முறையே 0 மற்றும் ரூபா 3,975,887 எனக் குறிப்பிடப்பட்டிருந்தன. | முற்பணக் கணக்கின் ஆண்டிறுதி மீதியானது நிதிக் கூற்றுக்களில் குறித்த மாதிரிப் படிவத்துக்கமைய காட்டப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தவறு காரணமாக காசாக செலவு வைக்கப்பட்டவையும் குறுக்கு குறிப்பின் மூலம் செலவு வைக்கப்பட்டவையுமாக யாவும் கூட்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் சரிவரக் கணக்கிலிடுவதற்குக் கவனம் மேற்கொள்ளப்பட வேண்டும் என உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். |

**(இ) பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அலுவலகம் பின்வரும் பதிவேடுகளை பேணியிராமை அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|
| இடர்கடன் எதிர்பார்ப்பு பதிவேடு | | |
| தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு, 2017 மார்ச் 09 ஆந் திகதிய 133(1) ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத்திட்டச் சுற்றறிக்கை மற்றும் 2007 ஏப்ரல் 20 ஆந் திகதிய 06/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் பேணப்படவில்லை. | தாபன விதிக்கோவை மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைப் பிரகாரம் இடர்க்கடன் எதிர்பார்ப்புப் பதிவேடு பேணப்பட வேண்டும். | இந்த அலுவலகத்தின் பதவியணியினரது எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாகும். ஆகவே, இடர்க்கடன் விண்ணப்பங்கள் சம்பந்தமாக தற்போது எதிர்பார்ப்புப் பதிவேடு ஒன்று கிடையாது. எதிர்காலத்தில் அதனை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்கள்**

2018 ஆம் ஆணடின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமாயினும் அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு பணியை முறைப்படி அமுல்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான விதிமுறைகள் உள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், அறிக்கையின் 4.1 ஆம் பந்தியினது அவதானிப்புக்கமைய அத்தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது இந்த அலுவலகத்தின் இடவசதி எவ்வகையிலும் போதுமானமதாக அமையவில்லை. ஆகவே, இந்த அலுவலகத்தை இடவசதிமிக்க வேறு இடத்தில் அமைப்பதையடுத்து அந்த உத்தியோகத்தருக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும். ஆகவே, உள்ளகக் கணக்காய்வு பதவிக்குரிய நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தில் நடைபெற முடியவில்லை என்பதைக் கணக்காய்வுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம். |

**(உ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | | |
| 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) | மீளாய்வாண்டின் போது ரூபா 1,040,344 கூட்டுத்தொகைக்குரிய 13 உறுதிச் சான்றுகளுக்குக் கொடுப்பனவு செய்யப்படுகையில் குறித்த முத்திரைக் கட்டணம் அறவிடப்படவில்லை. | அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். ரூபா 25,000 க்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கு முத்திரை ஒட்டுவதற்கோ அல்லது முத்திரையின் இன்வொய்சுப் பெறுமதியைக் கழித்துக் கொள்வதற்கோ ஏற்கனவே நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| அதிகாரச்சட்டத்தின் 3 மற்றம் 6 ஆம் பிரிவுகள் | | | ஆரம்பமாகியுள்ளது. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் ---------------------------------- | | | |
| நிதிப்பிரமாணங்கள் 139(4), 260, 264 என்பன | தெரிவுச் செவ்வைக்குள்ளான 23 உறுதிச் சான்றுகளின் ரூபா 766,505 கூட்டுத்தொகை தொடர்பான மொத்தத் தொகையும் குறித்த நபர்களது அடையாளம் உறுதி செய்யப்பட்டு பணம் வழங்கப்பட்டதற்கான சான்று இருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் நிறுவனத்திற்கு காசோலைகளை வழங்கும் பொது பற்றுச்சீட்டையும் குறித்த முத்திரையைப் பொறித்துக் கொள்ளுமாறும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், நிதியேற்பாடு மாற்றம் செய்யப்படுவதற்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாட்டைப் பெறுதலும் பயன்படுத்தப்படுதலும், ஏற்பாடு செய்த நிதியைப் பயன்படுத்துதல், சேமிப்பு ஆகியமை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டினது மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடும் நிகர நிதியேற்பாடும் முறையே ரூபா 15,200,000 மற்றும் ரூபா 9,935,000 கூட்டுத்தொகை ஆகும். ஒரு மீண்டுவரும் செலவினத்திலும் 03 மூலதனச் செலவினத்திலும் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சார்க் வலய அமைச்சரவை செயலாளர்களது கூட்டம் 2018 ஆம் ஆண்டில் நடைபெறாமை, 2018 ஆம் ஆண்டில் இந்த அலுவலகம் கொழும்பு |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் செலவு எதுவும் பதிவாகவில்லை. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு அந்த 04 செலவின விடயங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட மொத்தி நிதியேற்பாட்டுச் சேமிப்பு 100 சதவீதமாக இருந்தது. | செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | 05 கெப்பெட்டிபொல மாவத்தை கட்டிடத்திற்கு இடமாற்றம் பெற்றமை, அரச கருமமொழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான கிரயம் 2401 ஆம் செலவின விடயத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டமை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 05-01-01-1404 செலவின விடயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 800,000 ஆகும். இதில் எதுவுமே செலவாகவில்லை. அம்மொத்த நிதியும் ஏனைய 2 செலவின விடயங்களுக்கு 66/69 ஆம் நிதிப் பிரமாண மாற்றத்திற்கு உள்ளாகின. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்குரிய தீர்வை வரிக் கொடுப்பனவும் அடங்கலாக இச்செலவின விடயத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டது. எனினும், 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அலுவலக இடமாற்றம் திட்டமிடப்பட்டிருந்ததால் 2018 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டில் 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான தீர்வை செலுத்தப்படாததால் இச்சேமிப்பு ஏற்பட்டது. |
| (இ) | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை 05-01-01-1403 மற்றும் 05-01-01-2001 ஆகிய செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி முறையே ரூபா 16,200,000 மற்றும் ரூபா 16,500,000 என்பனவாகும். 03 ஆண்டுகளின் போது 2 செலவின விடயங்களிலும் ஏற்பட்ட சேமிப்பு நிதியேற்பாட்டின் 100 சதவீதமாகவும் 99 சதவீதமாகவும் அமைந்தது. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனினும், திட்டமிட்டவாறு இந்த அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றஞ் செய்யப்படாமையாலும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்றப்பட்ட சில விடயங்களாலும் இச்சேமிப்பு ஏற்பட்டது. |
| (ஈ) | ஒரு மீண்டுவரும் செலவின விடயத்திற்கும் 02 மூலதன செலவின விடயத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,750,000 நிகர நிதியேற்பாட்டில் ரூபா | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) | இந்த அலுவலகத்தை வேறு இடத்தில் அமைக்க திட்டமிடப்பட்டதால் அத்தியாவசதியமான பழுதுபார்த்தல்களே |

| | | | |
|---|---|---|---|
| | 2,264,059 சேமிப்புக்குள்ளானது. அது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் 76 முதல் 85 சதவீதமானதாகும். | மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | மேற்கொள்ளப்பட்டன. எதிர்பார்த்தவாறு இயந்திர சாதனங்கள் பழுதுபார்க்கப்படவில்லை. இடமாற்றத்தின் பின்னர் தேவையான குளிரூட்டிகளைப் பெறுவதற்கு நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், எதிர்பார்த்த இடமாற்றம் நடைபெறாமையால் சேமிப்பு ஏற்பட்டது. |
| (உ) | 08 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 19,200,000 கூட்டுத்தொகையுடைய மூலச் செலவின மதிப்பீடு ஆண்டின் இறுதியில் ரூபா 10,265,000 வரை மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த 08 செலவின விடயங்களும் மூலச் செலவின மதிப்பீட்டுப் பெறுமதியின் மொத்தக் குறைவு 47 சதவீதமாகவும் ஒவ்வொரு செலவின விடயத்தில் ஏற்பட்ட குறைவும் 27 முதல் 90 சதவீதமாகவும் அமைந்திருந்தது. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆவணங்களை வேறு நிறுவனங்களில் ஒப்படைத்தலுக்கென உத்தியோகத்தர்களைப் பயன்படுத்துவது மிகவும் ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனுடனும் நடைபெறுதல் மற்றும் ஆண்டின் மத்தியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் அமைச்சரவைக் கூட்டத்திற்கான ஆவணங்கள் விநியோகிக்கப்படாமை, இரு உத்தியோகத்தர்கள் மாத்திரமே போக்குவரத்துப் படியைப் பெற்றுக் கொண்டமை, இரவில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் ஏனைய உபசரிப்பு நடவடிக்கைகள் மற்றும் சுத்திகரிப்புச் செலவினம் மேலும் தேவையான செலவின விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டமை, சிக்கனச் செலவு சொத்துக் கடன் உத்தியோகத்தர்களால் கோரப்படாமை என்பன ஏற்பாடு செய்த நிதியில் சேமிப்பு ஏற்படக் காரணமாக அமைந்தன. |
| (ஊ) | ஏழு செலவின | பிரதான கணக்கீட்டு | கணக்காய்வு அவதானிப்பு |

| | | |
|---|---|---|
| விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 19,700,000 கூட்டுத்தொகையுடைய ஆரம்பச் செலவின மதிப்பீடு ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 26,120,000 வரை மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, அந்த 07 செலவின விடயங்களும் ஆரம்பச் செலவின மதிப்பீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 33 சதவீதமாகவும் ஒவ்வொரு செலவின விடயத்தினதும் அதிகரிப்பு 8 முதல் 600 சதவீதமாகவும் ஆகியிருந்தது. | உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.<br><br>அரச விடுமுறை நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் உத்தியோகத்தர்களை பணியில் ஈடுபடுத்துதல், எழுதுகருவிப் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் விலை உயர்வு, வாகனக் குழாமில் உள்ள வாகனங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருத்தல் காரணமாக பராமரிப்புச் செலவின அதிகரிப்பு, உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துரைடயவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களில் சில பழுதுபார்க்கப்பட்டமை, சில அலுவலக உபகரணங்களது சந்தை விலை அதிகரிப்பு, ஒரு நிறைவேற்று தர உத்தியோகத்தரின் எதிர்பாரா வெளிநாட்டுப் பயணத்திற்கு மொத்தச் செலவினமும் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டமை என்பவற்றால் மேலதிக நிதியேற்பாடு தேவைப்பட்டது. |

## 2.2 பொறுப்புக்களுக்கான கடப்பாடு ஏற்படுதல்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 94(2) க்கமைய வழங்கல் மற்றும் சேவைகள் சம்பந்தமான வருடாந்த மீண்டுவரும் செலவினமாக ரூபா 443,635 கூட்டுத்தொகை மாத்திரமே பொறுப்பாக | நிதிப் பிரமாணங்களின் படி நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகள் காட்டப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சகல பொறுப்புகளும் கடப்பாடுகளும் தவறுதலாக |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் (iv) ஆம் குறிப்பின் கீழ் பொறுப்புகளுக்கான கூற்றில் காட்டப்பட வேண்டுமெனினும், நிதிக்கூற்றுக்களில் (iii) ஆம் குறிப்பின் கீழ் காட்டப்பட்ட சகல பொறுப்புகளும் கடப்பாடுகளும் அதில் அடங்கியிருந்தன. | | பொறுப்புகளுக்கான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு கவனத்திற் கொள்ளுமாறு உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். |
| (ஆ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுக்கான (iii) ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மீண்டுவரும் செலவினத்திற்கான பொறுப்புகளதும் கடப்பாடுகளதும் கூட்டுத்தொகை ரூபா 650,349 ஆகும். எனினும், அலுவலகத்திற்குத் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடு மற்றும் பொறுப்பு மீதிகள் முறையே மீண்டுவரும் செலவினம் ரூபா 784,179 ஆகவும், மூலதனச் செலவினம் ரூபா 176,403 ஆகவும் கடப்பாடுகளதும் பொறுப்புகளதும் கூட்டுத்தொகை ரூபா 960,582 ஆகவிருந்தது. | கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் கணக்கிலிடும் போதும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடும் போதும் அவை சுற்றறிக்கைப் படி அமைய வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதியில் திறைசேரியால் வெளியிடப்பட்ட கடப்பாடு மற்றும் பொறுப்புகளுக்கான பதிவேட்டில் 2018 ஆம் ஆண்டின் டிசெம்பர் ஆரம்பத்தில் கட்டு நிதியைக் கோரி சிகாஸ் முறைமையில் நாம் உட்புகுத்திய தகவல்களே (Commitments) குறிப்பிடப்பட்டுள்ளன. அக்கடப்பாடுகள் யாவும் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்வு செய்யப்பட்டிருந்தன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிகள் நிறைவேற்றப்படாமை

அலுவலகத்தை வேறொரு கட்டிடத்தில் அமைப்பதற்கு 2016 தொடக்கம் 2019 யூலை 01 வரை தவறியமை காரணமாக பின்வரும் நிலைமை அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2016 தொடக்கம் மீளாய்வாண்டு முடிவு வரை கட்டிடத்தைப் புனரமைத்துத் திருத்துவதற்கு ரூபா 16,500,000 கூட்டுத்தொகை வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாடாக இருந்தது. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி | திட்டமிட்டவாறு இந்த அலுவலகம் கெப்பெட்டிபொல மாவத்தையில் உள்ள கட்டிடத்திற்கோ அல்லது சிராஸ்வதி கட்டிடத்திற்கோ கொண்டு செல்லப்பட |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், அந்த 03 ஆண்டுகளின் போது செலவினது கூட்டுத்தொகை ரூபா 145,816 மாத்திரமே ஆகியமையால் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் சேமிப்பு 99 சதவீதமாக இருந்தது. | திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | முடியாது ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |
| (ஆ) | 2017 மற்றும் மீளாய்வாண்டின் போது மூலதனச் சுவீகரிப்பிற்கு வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாடாக ரூபா 5,500,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், இரு ஆண்டுகளின் போதும், ரூபா 1,430,245 கூட்டுத்தொகை மாத்திரமே செலவாகியதால் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டில் 65 சதவீத சேமிப்பு ஏற்பட்டது. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் 50 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி சரியான மதிப்பீட்டைத் தயாரித்து 127(4) மற்றும் 127(5) நிதிப் பிரமாணங்களின் படி திணைக்கள நிதி யேற்பாட்டிற்கும் செலவினத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை தீவிரமாகப் பரிசீலித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். | திட்டமிட்டவாறு இந்த அலுவலகம் கெப்பெட்டிபொல மாவத்தையில் உள்ள கட்டிடத்திற்கு அல்லது சிராவஸ்தி கட்டிடத்திற்கோ கொண்டு செல்லப்பட முடியாது ஏற்பாடு செய்யப்பட்ட நிதி சேமிப்புக்குள்ளானது. |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|
| அலுவலக ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் கணனி அடிப்படையில் அந்த ஆவணங்களின் பிரதிகளைத் துரிதமாகப் பெறும் நோக்கத்துடன் ஆவணப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ விதிமுறைகளை நிறுவுவதற்கு 2015, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 13,000,000 கூட்டுத்தொகையுடைய நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2017 முடிவு வரை செயற்திட்டம் அமுலாகவில்லை.<br><br>எவ்வாறாயினும், செயற்திட்டத்தைத் தயாரித்து | உத்தேச செயற்திட்டம் அமுலாவது அல்லது அமுலாகாது போதல் சம்பந்தமாக தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உத்தேச செயற்திட்டத்திலுள்ள தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக செயற்திட்டத்தைத் திட்டமிடுவதற்குக் குறிப்பிடத்தக்க காலம் ஏற்பட்டது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். தற்சமயம் ICTA நிறுவனம் குறித்த செயற்திட்டத்தை அமுலாக்குவதற்குத் தேவையான சேவைகளைப் பெறும் பொருட்டு ஆர்வமுள்ள நிறுவனத்துடன் தனது ஆர்வத்தை வெளியிடுமாறு 2018 ஆகஸ்ட் 19 ஆந் திகதி கோரியுள்ளது. இதற்கமைய, அந்த நிறுவனம் அச்செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கான |

| | | |
|---|---|---|
| அமுலாக்குவதற்கும் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தச் செலவினத்திற்கும் தகவல் ற்றும் ஊடகத் தொழில்நுட்ப பிரதி நிறுவனம் (ஐஊவுயு) ஒத்துக் கொண்டால் இச்செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டில் நிதிஏற்பாடு செய்யப்படவில்லை எனினும், மீளாய்வாண்டிலும் குறித்த நிறுவனத்தின் மூலம் இதனை நிறைவு செய்ய முடியவில்லை. | | நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது எனச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். |

## 3.3 பொருட் கொள்வனவு

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **அலுவலகத்தின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 1201 - எழுதுகருவி வகைப் பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் செலவின விடயத்திற்காக மொத்த நிதியேற்பாடான ரூபா 5,000,000 மற்றும் ஆண்டின் இறுதியிலான மொத்தச் செலவினமான ரூபா 4,942,719 ஆகவிருந்தது. எனினும், அப்பொருட் கொள்வனவானது வருடாந்தப் பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி செலவிடப்படுதல் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி ஏற்பாடுகளுக் கமைய நடக்க வேண்டும். | நுகர் பொருட்கள் வகையான பொருட்களாளதால் எழுதுகருவியைப் பொருட்களது கொள்வனவு வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அவ்வகைக் கொள்வனவுகளும் திட்டத்தில் உள்ளடக்கப்படும். |
| (ஆ) 2402 செலவின விடயத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் பொருட் கொள்வனவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்படவில்லை. அச்செலவின விடயத்தின் கீழ் கொள்வனவுகளது மதிப்பிடப்பட்ட கிரயக் கூட்டுத் தொகை ரூபா 4,000,000 ஆகும். பொருட் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், கெப்பெட்டிபொல மாவத்தை கட்டிடத்திற்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,050,000 மதிப்பீட்டுக் கிரயத்திற்குரிய பொருட் | வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைச் செலவு செய்கையில் செலவின விடயங்கள் சரிவர இனங் காணப்பட்டுக் கணக்கிலிடப்பட வேண்டும். அதற்கமைய, கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டும். | இந்த அலுவலக் கடமைகளுக்கேற்ப நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களும் பொருட் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொருட் கொள்வனவுத் திட்டக் காலத்திற்கேற்ப செயற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. 2102 செலவின விடயத்தின் கீழ் ரூபா 4 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும், ஆண்டின் போது நாளாந்தத் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவுகள் நடைபெறாதிருந்ததும், அச்செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 4,228,509 ஆகும். | | தேவைகளுக்கு அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதால் நிதியேற்பாட்டை விட ரூபா 228,509 கூடுதலாகச் செலவாகியிருந்தது. |

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,047,000 பெறுமதியான பலநோக்கு நிழற்பிரதி இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளுக்கு இணங்காதவாறான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| **பொருட் கொள்வனவு வழிகாட்டி** | **இணங்காமை** | **பரிந்துரை** | **அலுவலகத்தின் கருத்துரை** |
|---|---|---|---|
| ---------------------------------- | ------------------------ | ------------------- | --------------------------------------------- |
| (i) 2.5.1 (ஆ) 2.6.1 (அ)(i), 2.8.3, 4.3 | கால அட்டவணையைத் தயாரித்தல், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவை நியமித்தல், மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரித்தல் என்பன நிகழவில்லை. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்காலக் கொள்வனவுகளின் போது பொருட் கொள்வனவுக் கால அட்டவணையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கும் முறைப்படி தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவை அமைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ii) 5.3.13, 5.3.10, 6.3.1(ஆ), 5.2 மற்றும் 5.3 | கேள்வி வைப்புப் பெறுமதி, கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வியை வழங்கிய வேண்டிய விதம், கேள்விகளைக் கோரும் ஆவணங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகளின் | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களின் மாதிரிப் படிவத்திற்கேற்ப பொருட் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் பொருட் கொள்வனவுகளின் போது, மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரிப்பதையடுத்து கேள்வி வைப்புக்கான பெறுமதியைத் தீர்மானிக்குமாறும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி பதிவேட்டைப் பயன்படுத்துமாறும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பதிவேட்டில் ஒவ்வொரு |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் நடவடிக்கை எடுத்திராததுடன், தேசிய போட்டியுடனான கேள்விகளைக் கோரும் விதிமுறைக்கான NPA/Goods/SBDO 1 எனும் இலக்கமுடைய ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி கோரல் பதிவேட்டின் பிரகாரம் மாதிரிப் படிவம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரிவின் கீழும் இருக்க வேண்டிய பதிவேடுகளைத் தயாரிக்குமாறும் அதற்கென குறித்த மாதிரிப் படிங்களைப் பயன்படுத்துமாறும் குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (iii) 6.1.1(அ) மற்றும் 6.1.4 | கேள்வி ஆவணங்களை வழங்கும் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் பொருட் கொள்வனவுகளின் போது இதனைக் கருத்திற் கொள்ளுமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (iv) 6.3.6 | கேள்விகளைத் திறத்தல் குறித்த படிவத்தில் அடையவில்லை. | அரசாங்க பொருந் கொள்வனவு வழிகாட்டிக் கோவை மற்றும் பொருட் கொள்வனவுக் கைநூல் என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். கேள்விகளைத் திறப்பது தொடர்பான தகவல்கள் தற்போது குறித்த மாதிரிப் படிவத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (v) 8.9.1(ஆ), 8.9.3 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட NPA/Goods/SBD 01 எனும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி | ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை மாதிரிப் படிவத்துக்கமைய ஒப்பந்த உடன்படிக்கை கையெழுத்திடப்படவில்லை. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி ஆவண மாதிரிப் | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். தற்போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| ஆவணத்தின் Section VIII இன் கீழ் குறிப்பிடப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை மாதிரிப் படிவம் | இயந்திரத்தின் உத்தரவாதக் காலத்தின் பின்னர் செலுத்த வேண்டிய பராமரிப்புக் கிரயம் மற்றும் கொள்வனவின் பின்னர் 5 அடுத்து வரும் ஆண்டுகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் உள்ளதை உறுதி செய்யும் ஒப்பந்தகாரருடன் இணக்கம் ஏற்படவில்லை. | படிவத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஈ) கணக்காய்வின் போது, ரூபா 1,185,000 கூட்டுத்தொகைப் பெறுமதியுடைய 05 கணனிகள், 03 மடிக் கணனிகள், 20 யூபிஎஸ் இயந்திரங்கள் கொள்வனவு தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| **பொருட் கொள்வனவு வழிகாட்டி** | **இணங்காமை** | **பரிந்துரை** | **அலுவலகத்தின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) 2.5.1(ஆ) மற்றும் 2.6.1(அ)(i) | பொருட் கொள்வனவுக் கால அட்டவணை தயாரிக்கப்படவில்லை. மீளாய்வாண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட கால எல்லைக்குள் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வில்லை. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் காலத்தில் கால அட்டவணை தயாரித்து அதற்கேற்ப நடக்குமாறு உத்தியோகத்தர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். |
| (ii) 2.8.3, 4.3 | தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவை நியமித்தல், அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகள் மற்றும் பொருட் கொள்வனவுக் கைநூல் 2.7.4 குறிப்பிடும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களின் மாதிரிப் படிவத்திற்கேற்ப பொருட் கொள்வனவு | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் பொருட் கொள்வனவுகளின் போது, மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரிப்பதையடுத்து கேள்வி வைப்புக்கான பெறுமதியைத் தீர்மானிக்குமாறும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி பதிவேட்டைப் |

| | | | |
|---|---|---|---|
| | நடவாமை, மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமை என்பன. | மேற்கொள்ளப்பட வேண்டும். | பயன்படுத்துமாறும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பதிவேட்டில் ஒவ்வொரு பிரிவின் கீழும் இருக்க வேண்டிய பதிவேடுகளைத் தயாரிக்குமாறும் அதற்கென குறித்த மாதிரிப் படிங்களைப் பயன்படுத்துமாறும் குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (iii) 5.2, 5.3, 5.3.13 | கேள்விக்கான பிணை வைப்பைத் தீர்மானிப்பது குறித்த வழிகாட்டி ஏற்பாடுகளின் படி நடாவாததுடன் NPA/SBD/Goods/01 இலக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி கோரல் ஆவணத்தின் பிரகாரம் கேள்வி கோரலுக்கான ஆவணங்களது மாதிரிப் படிவங்கள் தயாரிக்கப்படவில்லை. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை ஏற்பாடுகள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களின் மாதிரிப் படிவத்திற்கேற்ப பொருட் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்வரும் பொருட் கொள்வனவுகளின் போது, மொத்தக் கிரய மதிப்பீட்டைத் தயாரிப்பதையடுத்து கேள்வி வைப்புக்கான பெறுமதியைத் தீர்மானிக்குமாறும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி பதிவேட்டைப் பயன்படுத்துமாறும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பதிவேட்டில் ஒவ்வொரு பிரிவின் கீழும் இருக்க வேண்டிய பதிவேடுகளைத் தயாரிக்குமாறும் அதற்கென குறித்த மாதிரிப் படிங்களைப் பயன்படுத்துமாறும் குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (iv) 5.3.16(ஆ), (இ) மற்றும் பொருட் கொள்வனவு கைநூலின் 7.9.2(ச) | கேள்விகளைக் கோரும் போதும் தீர்மானம் மேற்கொள்ளப்படும் போதும் குறித்த ஏற்பாடுகளிலிருந்து விலகியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை மற்றும் பொருட் கொள்வனவுக் கைநூல் என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். இவ்விடயத்தை எதிர்காலத்தில் கருத்திற் கொள்ளுமாறு உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | 8.5.1 மற்றும் 8.5.2 | பொருட் கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தை கேள்விகளுக்கான தீர்மானம் தொடர்பான கேள்வியாளர்களுக்கு அறிவித்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளருக்கு ஒப்பந்தத்தை வழங்குதல் என்பன குறித்த ஏற்பாடுகளுக்கமைய நடைபெறவில்லை. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்வரும் பொருட் கொள்வனவு நடவடிக்கையின் போது சகல கேள்வியாளர்களுக்கும் அறிவிக்குமாறு உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். |
| (vi) | 8.9.1(ஆ) மற்றும் 8.9.3 | 05 கணனிகளையும் 03 மடிக் கணனிகளையும் ரூபா 1,115,000 க்குக் கொள்வனவு செய்கையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பெறுமதியானது உடன்படிக்கையில் இணைக்கப்பட்ட இணைப்பின் பிரகாரம் சரியாக இல்லாதிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையில் ஒப்பந்தகாரரின் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்படவில்லை. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு குறித்த பிழையற்ற ஆவணங்கள் உடன்படிக்கையில் இணைக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட வேண்டுமென உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். |

**3.4 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | அலுவலகத்தின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு - (ii) மாதிரிப் படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்ட ரூபா 65,111 கூட்டுத்தொகையுடைய இரு வாகன விபத்தாலான நட்டங்கள் 2018 டிசெம்பர் 31 | நட்டத்தை அறவிடுவதற்கு நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலகத்தின் நாளாந்தக் கடமைகளுக்குப் பயன்படுத்த போதிய வாகனங்கள் இன்மையால் 2018 செப்டம்பர் 14 ஆந் திகதி விபத்துக்குள்ளான வாகனத்தைப் |

| | | |
|---|---|---|
| இல் உள்ளவாறு அறவிடப்படவில்லை. | | பழுதுபார்க்க முடியவில்லை. ஏனைய வாகனம் மைக்ரோ ரக வாகனமாகும். குறித்த உதிரிப்பாகங்கள் மைக்ரோ நிறுவனத்திடம் இல்லாதிருந்ததால் பழுதுபார்ப்பது தாமதமாகியது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு (இலங்கை கணக்காளர் சேவை 1) யைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அலுவலக வசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மீளாய்வாண்டு இறுதி வரை உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை. | அலுவலக உள்ளக கணக்காய்வு சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக் கமைய நடக்க வேண்டும். | இந்த அலுவலகத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறியளவினதே ஆகும். ஏனைய அரச நிறுவனங்களதும் பல்வேறு செயற்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த அலுவலகத்தால் அமுல்படுத்தப்படாததால் இந்த அலுவலகத்திற்கு மேலதிகச் செலவை ஏற்படுத்தியவாறு உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை பேணும் தீவிர அவசியம் கிடையாது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர், வெற்றிடங்கள் என்பன

மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட 115 உத்தியோகத்தர்கள் இருந்ததுடன், உள்ளவாறு 75 உத்தியோகத்தர்களுடன் 75 வெற்றிடங்களும் நிலவின.